# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஐ.நா. சபையின் தலைமையகம் அருகே தீக்குளித்த திபெத் உரிமை ஆர்வலர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

   i. தீக்குளித்து உயிரிழந்தவர், நியூ யார்க்கில் உபேர் கார் ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்த லோப்கா ரங்சென் எனும் திபெத்தியர் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை மாலை, திபெத் தேசியக் கொடியுடன் ஐ.நா. சபைக்கு வெளியே சென்று இந்த விபரீத செயலில் அவர் ஈடுபட்டுள்ளார்.

   ii. கடந்த 1950-இல் திபெத்தை சீனா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததில் இருந்து, உலகெங்கிலும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், நாடு கடத்தப்பட்ட திபெத்தியர்களும் சீனாவின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகத் தங்களின் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

   iii. இச்சூழலில், திபெத், உய்குர் உள்ளிட்ட 55 சிறுபான்மை இனக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரே தேசிய அடையாளத்தை உருவாக்கும் நோக்கில் சீனா கடந்த புதன்கிழமை முதல் அமல்படுத்திய புதிய இன ஒற்றுமைச் சட்டத்துக்கு உலகெங்கிலும் உள்ள திபெத்தியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இச்சட்டம் எல்லை தாண்டிய நடவடிக்கைகளை எடுக்க சீனாவுக்கு சட்டபூர்வமான அதிகாரத்தை வழங்குவதால் அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் கவலை தெரிவித்துள்ளன.

   iv. சீனாவின் இச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே லோப்கா ரங்சென் தீக்குளித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

   v. சீனாவின் விளக்கம்:
      - இவ்விவ காரம் தொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் கூறுகையில், 'திபெத் பழங்காலம் முதல் எங்கள் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி.
      - இத்தகைய இனப் பிரச்னைகளை முன்னிறுத்தி சீனாவின் உள் நாட்டு விவகாரங்களில் தலையிடு வதை மேற்கத்திய நாடுகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

2. மத்திய கிழக்கு போரில் கொல்லப்பட்ட ஈரானின் முன்னாள் தலைமை மத குரு அயதுல்லா அலி கமேனியின் உடல், தலைநகர் டெஹ்ரானில் வியாழக்கிழமை

நள்ளிரவு முதல் பொது அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

i. இதன்மூலம், ஒரு வாரகால இறுதிச் சடங்கு நிகழ்வுகள் முறைப்படி தொடங்கியுள்ளன. ஈரான் மதகுரு மார்கள், உயர் தலைவர்கள், அரசு அதிகாரிகள், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் உள்பட வெளிநாட்டுத் தலைவர்கள், பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் வெள்ளிக்கிழமை தங்களின் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

ii. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் கடந்த பிப். 28 நடத்திய வான்வழித் தாக்குதலில் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதே தாக்குதலில் படுகாயமடைந்த இவரின் மகன் மோஜ்தபா கமேனி புதிய தலைமை மதகுருவாக பொறுப்பேற்றார். ஆனால், அவர் இதுவரை பொதுவெளியில் தோன்றவில்லை.

iii. அயதுல்லா அலிகமேனியின் இறுதிச் சடங்கில் இந்திய அரசு சார்பில் மத்திய இணை அமைச்சர் பபித்ர மார்கரிட்டா, பிகார் ஆளுநர் சையது அடா ஹஸ்னைன் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

3. மும்பையில் நடைபெற்ற சேலஞ்சர் ஸ்குவாஷ் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியாவின் தன்வி கன்னா சாம்பியன் ஆனார் .

4. ஜாக்ரெப் ரேப்பிட் செஸ் போட்டியில் 8 சுற்றுகள் முடிவில் இந்தியாவின் ஆர். பிரக் ஞானந்தா, டி.குகேஷ் ஆகியோர் முறையே 2, 3-ஆம் நிலைகளில் இருந்தனர்.

5. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட் பத்துக்கு தனிச் சட்டம் இயற்றுவது குறித்து ஆராய தற்போது நேரம் வந்துள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பச் செயலர் எஸ்.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக புது தில்லியில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

I. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் ஒருவரின் போலி குரல்பதிவு, புகைப்படம், காணொலிகளை உருவாக்கும் டீப்ஃபேக் போன்ற பல்வேறு பிரச்னைகளை கையாள, ஏற்கெனவே உள்ள தகவல் தொழில்நுட்ப விதிமுறைகள் மற்றும் பிற விதிமுறைகளை மத்திய அரசு பயன்படுத்தியுள்ளது.

II. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கான விதிமுறைகளை உருவாக்குவது குறித்து சரியான நேரத்தில் ஆராய மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவும், நானும் ஏற்கெனவே பேசியுள்ளோம்.

III. அநேகமாக செயற்கை தொழில்நுட்பத்துக்கு தனிச் சட்டம் இயற்றுவது குறித்து ஆராய தற்போது நேரம் வந்துள்ளது. இதற்கான சட்ட வரைவை அதிகாரிகள்

தயாரித்தாலும், எப்போது அந்தச் சட்டம் அமலுக்கு வரும் என்பதை என்னால் கூற இயலாது என்று தெரிவித்தார்.

6. மின்சார ரிக்ஷாக்களை இயங்கவிடாமல் முடக்குவதாக கூறப்பட்ட 3 சீன செயலிகளை செயலி பதிவிறக்க தளங்களான கூகுள் பிளே ஸ்டோர், ஆப்பிள் ஸ்டோரில் இருந்து நீக்கும்படி அந்த நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து மத்திய அரசு வட்டாரத் தகவல்கள் கூறியதா வது:

I. சீனாவில் இருந்து பேட்- பிஎம்எஸ், லாஸிஜி, ஏபோச்- ஐ-ஆன் ஆகிய செயலிகள் செயல்படுகின்றன. இந்தச் செயலிகள், ப்ளூடூத் வசதி மூலம் மின்சார வாகனங்களோடு இணைக்கப்பட்டு, அந்த வாகனங்களில் உள்ள பேட்டரிகளின் வோல்டேஜ், மின்னோட்ட அளவு, பேட்டரியின் வெப்பம் உள்ளிட் டவற்றைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்பட்டன.

II. இந்நிலையில், சமூக வலைதளங்களில் மேற்கண்ட 3 செயலிகள் குறித்த விடியோ அண்மையில் பரவியது. அந்த விடியோவில், 3 செயலிகளைப் பயன்படுத்தும் மர்ம நபர்கள், செயலிக்குள் உள் நுழைந்து, ப்ளூடூத் வசதி மூலம் அருகிலுள்ள மின்சார வாகன ரிக்ஷாக்களிலுள்ள பேட்டரி இணைப்பைத் தேடுவதும், அப்போது கிடைக்கும் மின்சார வாகன ரிக்ஷாக்கள் பேட்டரிகளுடன் செயலியை இணைத்து, அந்த பேட்டரியை செயலிழக்கச் செய்யும் காட்சிகளும் இருந்தன. அதேபோல், முடக்கப்பட்ட பேட்டரியை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர அந்தச் செயலி அவசியம் என்றும் விடியோவில் விளக்கப்பட்டது.

III. இணைய வசதி கொண்ட சில வாகனங்களில் இதுபோல நடக்கும் அத்துமீறலால், எண்மப் பாதுகாப்புக்கு (சைபர் செக்யூரிட்டி) அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதாகப் பரவலாக கவலை தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அந்த 3 செய லிகளையும் கூகுள் ப்ளே ஸ்டோர், ஆப்பிள் ஸ்டோர் ஆகியவற்றில் இருந்து உடனடியாக நீக்கும்படி, கூகுள் மற்றும் ஆப்பிள் நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது

7. இந்திய பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சதவீதம் வரி விதிக்கும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலக (யுஎஸ்டிஆர்) பரிந்துரைக்கு எதிராக, வரும் ஜூலை 8-ஆம் தேதி நடைபெற உள்ள பொது விசாரணையில், தமது தரப்பு வாதங்களை மத்திய வர்த்தக அமைச்ச கம் முன்வைக்க உள்ளது.

I. அமெரிக்காவின் 1974-ஆம் ஆண்டு வர்த்தக சட்டத்தின் 301- ஆவது பிரிவை பயன்படுத்தி, அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய பொருள்களுக்கு

கூடுதலாக 12.5 சதவீத வரி விதிக்க, கடந்த மாதம் யுஎஸ்டிஆர் பரிந்துரைத்தது.

II. பிற நாடுகளில் தங்கள் விருப்பத்துக்கு மாறாக தொழிலாளர்களைக் கட்டாயம் பணிபுரிய வைத்து தயாரிக்கப்படும் பொருள்கள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்கும் விதிமுறைகளை சுட்டிக் காட்டி, இந்த வரியை விதிக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இந்த விதிமுறைகளின் கீழ், இந்தியாவுடன் சேர்த்து மொத்தம் 54 நாடுகள் மீது இந்த வரியை விதிக்க பரிந்துரைக்கப்பட்டது.

III. வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகள் குறித்து விசாரணை மேற்கொண்டு, வரி அல்லது பிற கட்டுப்பாடுகளை விதிக்க அனுமதிக்கும், அமெரிக்காவின் சக்தி வாய்ந்த வர்த்தக கருவியாக, வர்த்தக சட்டத்தின் 301-ஆவது பிரிவு உள்ளது.

IV. இந்த வரி விதிப்புப் பரிந்துரை தொடர்பாக யுஎஸ்டிஆருக்கு இந்தியா ஏற்கெனவே அனுப்பிய எழுத்துபூர்வ பதில்:

- சட்டபூர்வமாக விதிக்கப்பட்ட தடைகள், சட்டத்தை அமல்படுத்தி கண்காணிக்கும் முறை, கட்டாயம் பணிபுரிய வைக்கப்படும் தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தை குறைக்க மேற்கொள்ளப்படும் கொள்கை நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வகையில், முறையாக வடிவமைக்கப்பட்டும் படிப்படியாக முன்னேறவும் கூடிய அணுகுமுறையை இந்திய சட்ட முறை பிரதிபலிக்கிறது. இந்த வலுவான சட்டமுறையை கருத்தில் கொள்ளாமல், கூடுதல் வரி விதிக்க யுஎஸ்டிஆர் பரிந்துரைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
- இந்த வரி விதிப்புப் பரிந்துரை தொடர்பாக அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் வரும் ஜூலை 8-ஆம் தேதி பொது விசாரணை நடைபெற உள்ளது. அப்போது யுஎஸ்ஆடிஆர் அலுவலகத்திடம் வரி விதிப்புப் பரிந்துரைக்கு எதிராக, தமது தரப்பு வாதங்களை மத்திய வர்த்தக அமைச்சக அதிகாரிகள், இந்திய தொழில் கூட்டமைப்பு, இந்திய தொழில் மற்றும் வர்த்தக சபை கூட்டமைப்பு, வாகன உதிரிபாக உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளிட்ட தொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் முன்வைக்க உள்ளனர்.

8. பாதுகாப்புப் படைகளுக்கு ரூ.52,000 கோடி மதிப்பில் பல்வேறு பாதுகாப்புத் தளவாடங்களை கொள்முதல் செய்ய, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்புத் தளவாட கொள்முதல் கவுன்சில் (டி.ஏசி) கொள்கைபூர்வ நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

I. ரேடியோ அலைகள், ரேடார் அலைகள் மற்றும் பிற மின்னணு சிக்னல்கள் மூலம், எதிர்நாட்டு ட்ரோன்களை கண்டறிந்து ராணுவத்தினரைப் பாதுகாக்கும் 'ஆகாஷ்

தரங்' மின்னணு போர் அமைப்பு, பீரங்கி வாகனங்களை அழிக்கும் வகையில் ராணுவ வீரர்கள் தங்கள் தோளில் அல்லது கைகளில் எடுத்துச் சென்று இயக்கக்கூடிய ஏவுகணை அமைப்புகள், தரையில் இருந்து வானில் ஏவப்பட்டு நடுத்தர தொலைவில் உள்ள இலக்கைத் அழிக்கும் ஆயுத அமைப்பு, மிகக் குறுகிய தொலைவில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் வான் பாதுகாப்பு அமைப்பு உள்ளிட்டவற்றை இந்திய ராணுவத்துக்காக கொள்முதல் செய்ய டிஏசி ஒப்புதல் அளித்துள்ளது.

II. இதேபோல கடற்படைக்காக கப்பல்களில் இருந்து இயக்கக் கூடிய ட்ரோன்கள், கடலடியில் எதிரி நாட்டு கப்பல்கள் நேரடியாக மோதி வெடிக்கும் கண்ணி வெடிகளைப் போல அல்லாமல், கப்பல்கள் வரும் பல்வேறு அறிகுறிகளை வைத்து இலக்கைக் கண்டறிந்து அவற்றை அழிக்கும் கண்ணிவெடிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்யவும், மின்சார மோட்டார்களின் உதவியால் கப்பலை இயக்கும் அமைப்பை பரிசோதனை செய்ய நிலத்தில் பிரத்யேக பரிசோதனை மையம் அமைக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

III. சூரிய சக்தி மூலம் வானில் மிக அதிக உயரத்தில் நீண்ட காலம் பறந்து செயற்கைக்கோள்கள் அளிக்கும் கண்காணிப்பு, தகவல் தொடர்பு போன்ற சேவைகளை அளிக்கும் ஆளில்லா விமானத்தை இந்திய விமானப் படைக்காக கொள்முதல் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.52,000 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. பிரதமர் நரேந்திர மோடி இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய 3 நாடுகளுக்கு ஜூலை 6 முதல் 11 வரை அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

I. மூன்று நாடுகள் பயணத்தின் முதல் கட்டமாக, இந்தோனேசியாவுக்குச் செல்லும் பிரதமர், பின்னர் ஆஸ்திரேலியாவுக்கும், அதைத் தொடர்ந்து நியூஸிலாந்துக்கும் செல்லவிருப்பதாக வெளியுறவு அமைச்சக செயலர் (கிழக்குப் பிரிவு) ருத்ரேந்திர தாண்டன் தெரிவித்தார்.இந்தியப் பிரதமர் ஒருவர் நியூஸிலாந்துக்கு செல்வது கடந்த 40 ஆண்டுகளில் இதுவே முதல்முறை என்றும் அவர் குறிப்பிட்டார்.

II. பிரதமரின் நியூஸிலாந்து பயணம் குறித்து அந்நாட்டின் பிரதமர் கிறிஸ்டோபர் நிக்ஸன் சமூக ஊடகத்தில் பதிவிட்டார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

- பிரதமர் மோடி முதல் முறையாக நியூஸிலாந்துக்கு அடுத்த வாரம் பயணம் மேற்கொள்விருக்கிறார் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சிய டைகிறேன். உலகின் மிகப் பெரிய, வேகமாக வளரும் பெரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. நியூஸிலாந்தின் பொருளாதார வளமைக்கு இந்தியா பெரிதும் முக்கியத்துவம் வாய்ந் ததாகும்.

- கடந்த ஏப்ரலில் கையொப்பமிடப்பட்ட நியூஸிலாந்து-இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இருதரப்பு உறவுகள் அடுத் தகட்டத்துக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளன. இது, நியூஸிலாந்துக்கு அதிக வேலைவாய்ப்பு, அதிக ஏற்றுமதி, வலுவான பொருளாதார வளர்ச்சியை வழங்கும். நியூஸிலாந்து பொருள்கள்-சேவைகளுக்கு 140 கோடி மக்களுடன் கூடிய சந்தையைக் கொண்டுவந்து, புதிய வாய்ப்புகளைத் திறக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
- இந்தியா –நியூஸிலாந்து இடையே சரக்கு-சேவை சார்ந்த இரு தரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கவும், முதலீடுகளை ஊக்குவிக்கவும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கடந்த ஏப்ரலில் கையொப்பமிடப்பட்டது. இந்த ஒப்பந்தம், நியூஸிலாந்துக்கான இந்திய ஏற்றுமதிகளுக்கு 100 சதவீத வரியில்லாத அணுகலை வழங்குகிறது. நியூஸிலாந்தைப் பொறுத்தவரை, உலகளாவிய வர்த்தக நிச்சயமற்றத் தன்மைக்கு மத்தியில் உலகில் வேகமாக வளரும் பெரும் பொருளாதாரமான இந்தியாவில் பாதுகாப்பான சந்தை அணுகலை உறுதி செய்கிறது.
- கடந்த 2024-25 ஆம் ஆண்டில் இந்தியா-நியூஸிலாந்து இருதரப்பு சரக்கு-சேவை வர்த்தகத்தின் மதிப்பு 2.4 பில்லியன் டாலராகும் (ரூ.22,843 கோடி). சரக்கு வர்த்தகம் மட்டும் 1.3 பில்லியன் டாலர் (ரூ.12.373 கோடி) என்பது குறிப்பிடத்தக்கது.

10. வளரிளம் சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்று நோய் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை 91,748 பள்ளி மாணவிகள் பலனடைந்திருப்பதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

I. ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் (ஹெச்பிவி) எனப்படும் கிருமித் தொற்று காரணமாக கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படுகிறது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கருப்பை வாயின் உயிரணுக்களில் புற்று செல்கள் பரவி, அதன் திசுக்களை பாதிக்கும். உரிய நேரத்தில் கண்டறிந்து சிகிச்சை பெறாவிட்டால், நுரையீரல், கல்லீரல், சிறுநீர்ப்பை, மலக்குடல் உள்ளிட்ட பிற உறுப்புகளுக்கும் பரவ வாய்ப்புள்ளது.

II. இதையடுத்து, 9 வயது முதல் 14 வயதுடைய சிறுமிகளுக்கு ஹெச்பிவி தடுப்பூசி செலுத்த ரூ.38 கோடியை முந்தைய திமுக அரசு ஒதுக்கீடு செய்தது. அதன் கீழ், இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர் மற்றும் தருமபுரியில் கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இலவசமாக வளரிளம்பெண் குழந்தைகளுக்கு செலுத்த திட்டமிடப்பட்டது.

III. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு இரண்டு தவணை தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

IV. மற்றொருபுறம், நாடு முழுவதும் 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு ஹெச்பிவி தடுப்பூசிகளை இலவசமாக வழங்கும் திட்டத்தை கடந்த பிப்ரவரி மாதம் 28-இல் பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.

V. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு 6 லட்சம் தடுப்பூசிகளை தமிழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. இவ்விரு திட்டங்களின் மூலம் இது வரை 91,748 பேர் பயனடைந்துள்ளனர். தடுப்பூசிகள் அனைத்தும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகளில் இருப்பு வைக்கப்பட்டு, அங்கேயே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

VI. இது குறித்து பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:
- கருப்பை வாய் புற்றுநோயை உண்டாக்கும் முதன்மையான ஹெச்பிவி வைரஸ் கிருமிகளுக்கு எதிராக 90 சதவீத பாதுகாப்பை இத்தடுப் பூசிகள் வழங்குகின்றன. இத்தடுப்பூசி உலக சுகாதார நிறுவனத்தால் சான்று அளிக்கப்பட்டது. இவற்றால், பெரிய அளவிலான தீமைகள் எதுவும் இல்லை. எனவே, பெற்றோர் தயங்காமல், தங்களது குழந்தைகளுக்கு ஹெச்பிவி தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## 11. செவ்வாய் கிரகத்தில் மனிதக் குடியிருப்புகளை அமைப்பதற்கான அறிவியல் சாத்தியக்கூறுகள் மற்றும் நடைமுறைச் சவால்கள்.

I. ஆராய்ச்சியின் பின்னணி
- 20 ஆண்டுகளுக்கும் மேலாக, விஞ்ஞானிகள் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் குடியேறுவதற்கான சாத்தியக்கூறுகளைத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.
- அமெரிக்கப் புவியியல் சங்கம் (American Geological Association) ஏற்பாடு செய்த கூட்டத்தில், நிலையான குடியிருப்புகளை உருவாக்கச் செவ்வாய் கிரகத்தில் உள்ள உறைந்த பனியைப் பயன்படுத்துவது குறித்த முக்கியக் கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் பகிர்ந்துகொண்டனர்.

II. செவ்வாய் கிரகத்தின் புவியியல் உண்மைகள்
- சூரியனிலிருந்து நான்காவது கிரகமாகவும், பூமியின் மிக அருகிலுள்ள அண்டை கிரகமாகவும் செவ்வாய் விளங்குகிறது; இது பூமியிலிருந்து சுமார் 5.46 கோடி கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- இக்கிரகம் முக்கியமாக கார்பன் டை ஆக்சைடைக் கொண்ட மிக மெல்லிய வளிமண்டலத்தைக் கொண்டுள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் சுமார் 5 மில்லியன் கன கிலோமீட்டர் அளவிலான நீர் உறைந்த பனிக்கட்டி வடிவில் உள்ளது.
- அடிக்கடி மற்றும் தீவிரமான தூசுப் புயல்கள் வீசும் கிரகமாக இது

அறியப்படுகிறது.

III. காலநிலை மற்றும் அறிவியல் சார்ந்த சவால்கள்

- செவ்வாய் கிரகத்தின் வெப்பநிலை பெருமளவில் மாறுபடுகிறது; அதிகபட்சமாக 70°F வரை உயர்ந்தாலும், குறைந்தபட்சமாக -153°F முதல் -225°F வரை குறைகிறது.
- பூமியைப் போலன்றி, செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலத்தால் சூரிய வெப்பத்தைத் தக்கவைக்கவோ அல்லது ஆபத்தான கதிர்வீச்சைத் தடுக்கவோ முடிவதில்லை; எனவே சூரியன் மறைந்தவுடன் வெப்பநிலை வெகுவாகக் குறைகிறது.
- வளிமண்டலத்தால் சூரியக் கதிர்களைத் தடுத்து நிறுத்த முடியாததால், அதிக ஆற்றல் கொண்ட விண்வெளி கதிர்வீச்சிலிருந்து (cosmic radiation) பாதுகாப்பு அளிக்கும் வகையில் மனிதக் குடியிருப்புகள் சிறப்பாக வடிவமைக்கப்பட வேண்டும்.

IV. முன்மொழியப்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம்

- பூமியிலிருந்து கட்டுமானப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான செலவைத் தவிர்க்க, உறைந்த பனி மற்றும் 'ரெகோலித்' (செவ்வாய் கிரகத்தின் மண் மற்றும் பாறை) ஆகியவற்றைக் கட்டுமானத்திற்குப் பயன்படுத்த விஞ்ஞானிகள் பரிந்துரைக்கின்றனர்.
- செவ்வாய் கிரகத்தின் பனியுடன் 'ஹைட்ரோஜெல்' (Hydrogel) போன்ற பொருட்களைக் கலப்பதன் மூலம், கதிர்வீச்சுத் தடுப்பாகவும் செயல்படக்கூடிய வலிமையான கட்டுமானப் பொருளை உருவாக்க முடியும் என்று பொறியாளர்கள் நம்புகின்றனர்.
- பனியால் ஆன குவிமாடம் போன்ற 'இக்லூ' (Igloo) அமைப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்கள் உள்ளன; இவை ஜன்னல் போன்ற திறப்புகள் வழியாக இயற்கையான சூரிய ஒளி உள்ளே நுழைய அனுமதிக்கும்.
- குடியிருப்பாளர்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்கத் துணை வெப்பமூட்டிகளைப் (heaters) பயன்படுத்தி, உட்புற வெப்பநிலையை சுமார் -20°C-இல் பராமரிப்பதே இதன் நோக்கமாகும்.

V. சாத்தியக்கூறு மற்றும் பொருளாதாரக் காரணிகள்

- தற்போதைய தொழில்நுட்பம் செவ்வாய் கிரகத்தில் குடியேறுவதை சாத்தியமாக்கினாலும், அதற்கான செலவு மிக அதிகமாக (கோடிக்கணக்கான ரூபாயாக) இருக்கும்; இதனால் இது பெரும் செல்வந்தர்களுக்கு மட்டுமே சாத்தியமானதாக அமையும்.
- கனிம வளங்கள் மற்றும் விவசாயச் சாத்தியக்கூறுகள் குறித்து மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள, ஆரம்பத்தில் சிறிய குழுக்கள் அங்கு வசிப்பதற்கான திட்டங்களை விஞ்ஞானிகள் தற்போது வகுத்து வருகின்றனர்.

- செவ்வாய் கிரகம் குறிப்பிடத்தக்க உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களைக் கொண்டிருந்தாலும், அறிவியல் முன்னேற்றங்கள் 'பனிக்கட்டி நகரம்' (City of Ice) எனும் கனவை மெல்ல மெல்ல ஒரு சாத்தியமான யதார்த்தமாக மாற்றி வருகின்றன.

## 12. இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பு - குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ள புள்ளிவிவர முரண்பாடுகள் குறித்த பார்வை.

I. உலகளாவிய தரவரிசைகள் மற்றும் ஒப்பீட்டுப் பாதுகாப்பு

- 2017-ஆம் ஆண்டு முதல், ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகம் (அமெரிக்கா) மற்றும் ஓஸ்லோ அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (நார்வே) ஆகியவை இணைந்து 181 நாடுகளில் பெண்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்து வருகின்றன.
- 2025–26-ஆம் ஆண்டிற்கான "பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறியீட்டில்" (Women, Peace and Security Index), இந்தியா 131-வது இடத்தைப் பிடித்துள்ளது. 2023–24 அறிக்கையில் இந்தியா 131-வது இடத்திற்கு முந்தைய நிலையான 128-வது இடத்தில் இருந்தது; அதிலிருந்து தற்போது சரிவு ஏற்பட்டுள்ளது.
- பூட்டான், நேபாளம், சீனா மற்றும் இலங்கை உள்ளிட்ட அண்டை நாடுகள் இந்தியாவை விடப் பெண்களுக்குச் சிறந்த பாதுகாப்பையும் நல்வாழ்வையும் வழங்குகின்றன என்பதை இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

II. தேசிய குற்றப் புள்ளிவிவரங்கள் (2024)

- தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) 2024-ஆம் ஆண்டுத் தரவுகளின்படி, பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் (1,00,000 பெண்களுக்கு) அதிகமாக உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பின்வருமாறு:
- புது தில்லி: 130
- தெலுங்கானா: 128
- ஒடிசா: 118
- ராஜஸ்தான்: 106
- ஆந்திரப் பிரதேசம்: 95
- கேரளா: 80
- இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்களின் தேசிய சராசரி விகிதம் 65 ஆகும்.
- தமிழ்நாட்டில் 1,00,000 பெண்களுக்கு 29 குற்றங்கள் மட்டுமே பதிவாகியுள்ளன; இது தேசிய சராசரியில் பாதியளவிற்கும் குறைவானதாகும்.

III. தமிழ்நாட்டில் குறைந்த குற்ற விகிதம்: ஒரு முரண்பாடு

- தமிழ்நாட்டில் நிலவும் குறைந்த குற்ற விகிதம் என்பது சிறந்த பாதுகாப்பிற்கான

அறிகுறி மட்டுமல்ல, மாறாக அனைத்துப் புகார்களையும் பதிவு செய்வதில் காவல்துறை காட்டும் தயக்கத்தின் விளைவுதான் என்று குற்றவியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

- ஒவ்வொரு குற்றத்தையும் பதிவு செய்வது பொது விவாதத்திற்கும், ஆளும் அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான தர்மசங்கடத்திற்கும் வழிவகுக்கும் என்ற ஆழமான அச்சம் காவல்துறைத் துறையில் நிலவுகிறது.
- பெறப்படும் ஒவ்வொரு புகாருக்கும் முழுமையான விசாரணையை மேற்கொள்ளத் தேவையான ஆள்பலம் பல நேரங்களில் காவல் நிலையங்களில் இருப்பதில்லை.

IV. அமைப்புரீதியான தோல்விக்கான சில உதாரணங்கள்

- சென்னையின் புறநகர்ப் பகுதியொன்றில், பாலியல் வன்கொடுமை குறித்த பெண்ணின் புகாரை, அது பொய்யானது என்று கருதிய உதவி ஆய்வாளர் ஒருவர் புறக்கணித்தார். ஒரு மாதத்திற்குள்ளாகவே, அதே பகுதியில் மேலும் இரு பெண்கள் காணாமல் போயினர்; தொடர் விசாரணைகளில், அந்த ரயில் பாதையில் பெண்களைத் தாக்கி வந்த ஒரு தொழிலாளியால்தான் அவர்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரியவந்தது.
- அனாதை இல்லக் காப்பாளர் ஒருவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாக பள்ளி மாணவி ஒருவர் அரசு மருத்துவர் ஒருவரிடம் தெரிவித்தார். உயர் மட்டக் காவல்துறை அதிகாரிகள் இதில் கவனம் செலுத்திய போதிலும், உள்ளூர் விசாரணை அதிகாரி ஒருவர் காப்பாளரிடம் பெயரளவில் மட்டுமே விசாரணை நடத்திவிட்டு, அந்தப் புகாரை பொய்யானது என்று கூறி தள்ளுபடி செய்தார்.
- பொறியியல் கல்லூரி ஒன்றில், முன்னாள் மாணவர் ஒருவரால் வகுப்பறைக்குள்ளேயே மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார். இச்சம்பவம் குறித்து முறையான மற்றும் அறிவியல் பூர்வமான விசாரணையை நடத்தாததற்காக காவல்துறை அதிகாரிகளைப் பின்னர் சென்னை உயர் நீதிமன்றம் விமர்சித்தது.

V. விசாரணையின் மீதான போதிய மேற்பார்வை இன்மை

- பொதுமக்களின் கொந்தளிப்பைத் தணிக்க, விரைவாகக் கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உயர் அதிகாரிகள் பெரும்பாலும் தங்கள் கீழ்நிலை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.
- ஒருவர் கைது செய்யப்பட்ட பிறகு, விசாரணை எந்தத் தரத்தில் நடைபெறுகிறது என்பது குறித்து பெரும்பாலும் எந்த மேற்பார்வையும் இருப்பதில்லை; இதனால் நீதிமன்றத்தில் பல குற்றவாளிகள் விடுவிக்கப்படும் நிலை ஏற்படுகிறது.
- குற்றங்களைத் தடுப்பதற்கான ஒரே பயனுள்ள வழி, ஒவ்வொரு புகாரையும் உடனடியாகப் பதிவு செய்வதும், ஒவ்வொரு வழக்கிலும் முழுமையான மற்றும் தொழில்முறை ரீதியிலான விசாரணை நடைபெறுவதை உறுதி செய்வதுமே ஆகும்.

13. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலிருந்து (MGNREGS), புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "விக்சித் பாரத் – வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான உத்தரவாதத் திட்டம் (கிராமப்புறம்)" [VB-G RAM G]-க்கு மாறுதல்.

I. வரலாற்றுப் பின்னணி மற்றும் கொள்கை மாற்றம்

- ஜூலை 1, 2026 முதல், மத்திய அரசு UPA ஆட்சிக்காலத்தில் இருந்த MGNREGS திட்டத்திற்குப் பதிலாக "விக்சித் பாரத் – வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான உத்தரவாதத் திட்டம் (கிராமப்புறம்)" [VB-G RAM G]-ஐக் கொண்டு வந்தது.
- வரலாற்று ரீதியாக, முந்தைய திட்டம் (பிரதமர் மன்மோகன் சிங் காலத்தில் செயல்படுத்தப்பட்டது) முக்கியமாக உடல் உழைப்பை வழங்குவதில் கவனம் செலுத்தும் "தேவை சார்ந்த" அணுகுமுறையைப் பின்பற்றியது.
- VB-G RAM G திட்டமானது, வெறும் வேலையை உறுதி செய்வதிலிருந்து மாறி, நவீன விதை மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி மற்றும் திட்டமிடப்பட்ட தேசிய வளர்ச்சிக்காக கிராமப்புற உழைப்பைச் சரியாகப் பயன்படுத்தும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்தைக் குறிக்கிறது.

II. புவியியல் ரீதியான செயல்படுத்தல் மற்றும் வரம்பு

- இத்திட்டம் இந்தியாவின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா போன்ற பாஜக அல்லாத ஆளும் மாநிலங்கள் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டாலும், பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் போன்ற சில மாநிலங்கள் நிதிப் பகிர்வு விகிதங்கள் மற்றும் செயல்பாட்டு இடைநிறுத்தங்கள் குறித்து கவலைகளை எழுப்பியுள்ளன.
- கடுமையான நிலத்தடி நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள புவியியல் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது; மத்திய அரசின் செலவினத்தில் குறைந்தது 65% இப்பகுதிகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

III. முக்கிய அம்சங்கள் மற்றும் இலக்குக் குழுக்கள்

- VB-G RAM G திட்டம் கிராமப்புற மக்களுக்கான உத்தரவாத வேலைவாய்ப்புக் காலத்தை ஆண்டுக்கு 125 நாட்களாக உயர்த்துகிறது.
- இத்திட்டம் தனியாக வசிக்கும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியின சமூகத்தினருக்குச் சிறப்பு வேலை அட்டைகளை வழங்குகிறது.
- V-GPP மாதிரி: "விக்சித் கிராம ஊராட்சித் திட்டம் (VGPP)" என்பது வெறும் விருப்பப் பட்டியல்களை உருவாக்குவதற்குப் பதிலாக, கிராமப்புற உள்கட்டமைப்பிற்கான குறிப்பிட்ட மேம்பாட்டு மாதிரிகளை உருவாக்கப் புவிசார் தகவல்களைப் (geospatial

information) பயன்படுத்துகிறது.

IV. கிராமப்புற மேம்பாட்டிற்கான முக்கிய கருப்பொருள்கள்

இத்திட்டம் ஐந்து முக்கியமான புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த கருப்பொருள்களில் கவனம் செலுத்துகிறது:

- நீர் பாதுகாப்பு: குறிப்பாக வறட்சிக்கு ஆளாகக்கூடிய வட்டாரங்களில் நிலத்தடி நீரை நிர்வகித்தல்.
- கிராமப்புற உள்கட்டமைப்பு: பொதுச் சொத்துக்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து சரிசெய்தல்.
- வாழ்வாதார ஆதரவு: கிராமப்புறக் குடும்பங்களுக்கு நீண்டகாலப் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குதல்.
- பேரிடர் தடுப்பு: இயற்கை பேரிடர்களுக்கு எதிராக உள்ளூர் மக்களின் தாங்கும் திறனை வலுப்படுத்துதல்.
- காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன்: தாக்க மதிப்பீடுகளை ஒருங்கிணைத்தல். பஞ்சாயத்துத் திட்டமிடல்.

VI. செயல்பாட்டு மற்றும் நிதி அமைப்பு

- இத்திட்டத்திற்கான மொத்தச் செலவும் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- விவசாயப் பணிகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தவிர்க்க, விதைப்பு மற்றும் அறுவடை போன்ற முக்கிய விவசாயப் பருவங்களின்போது 60 நாட்களுக்குப் பணி இடைவெளி இருக்க வேண்டும் என்று இத்திட்டம் கட்டாயமாக்குகிறது.
- விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் பணி வழங்கப்பட வேண்டும்; அவ்வாறு வழங்கத் தவறினால், மாநில அரசு சட்டப்படி வேலையின்மைப் படியை வழங்க வேண்டும்.

VII. முடிவுரை

VB-G RAM G என்பது ஒரு ஆக்கபூர்வமான முன்னேற்றமாகும். வரிப் பணத்தை நோக்கமற்ற முறையில் செலவிடும் வழக்கிலிருந்து விலகி, தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வதன் மூலம், 'வளர்ந்த இந்தியா'வை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய அடித்தளமாக இத்திட்டம் விளங்குகிறது